திரு. இரா. இராசமாணிக்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இரசாயன உரங்கள் கூட்டுறவுத் துறையிலே விற்பதற்கும், தனியார் கடைகளிலே விற்பதற்கும் ஏராளமான விலை வித்தியாசம் இருக்கிறது. ஒரு மூட்டைக்கு ஐந்து ரூபாய்க்கு மேல் வித்தியாசம் இருக்கிறதே, இது என்ன காரணத்தினால் ஏற்படுகிறது? அதை குறைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, போக்குவரத்துச் செலவு சற்று அதிகமாக ஆகிற காரணத்தால் இது நேர்கிறது. தனியார் கடைகளைப் பொறுத்தவரைக்கும், விவசாயிகள் கிராமங்களிலிருந்து அவர்களுடைய சொந்த வண்டிகளை கொண்டு வந்து அருகாமையிலே இருக்கிற நகரத்துக்கு வந்து எடுத்துச் சென்றுவிடுகிறார்கள். 'டிரான்ஸ் போர்ட்டேஷன்' செலவு அவர்களுக்கு இருப்பதில்லை. தனியார் கடைகள் அந்த அளவிற்கு விலையை குறைத்து கொடுக்கிறார்கள். ஆனால் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரைக்கும் விநியோகிக்கப்படுகிற உரங்களை அந்த கிராமங்களிலே, பட்டிக்காட்டிலே இருக்கிற சங்கங்களிலேயே அந்த உரத்தைத் தருகிற காரணத்தால் அதற்கான கூடுதல் போக்குவரத்து செலவு ஆகிறது. இருந்தாலும், தற்போது கிட்டத்தட்ட மூட்டைக்கு ரூபாய் மூன்றிலிருந்து நாலு வரை உர விலையை குறைக்க வேண்டுமென்று அண்மையில் அரசு உத்தரவிட்டிருக்கிறது. அது விவசாயிகளுக்கும் பயனுடையதாக அமைந்திருக்கிறது.

சைதாப்பேட்டையிலுள்ள ஜுடிஷியல் குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிமன்றம்.

*வினா எண். 71—திரு. பம்மல் நல்லதம்பி: மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சைதாப்பேட்டை 2-ம் வகுப்பு ஜுடிஷியல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில், மாஜிஸ்டிரேட் இல்லாமல், வழக்குகள் தேங்கி கிடப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பதவி எப்போது நிரப்பப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) 28-4-81 அன்று சைதாப்பேட்டையில் உள்ள ஜுடிஷியல் குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதி மன்றத்தில் ஒரு நடுவர் புதிதாகப் பதவி ஏற்றுள்ளார்.

(முற்பகல் 9-50)

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, சைதாப்பேட்டையில் புதிதாக நடுவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று சொன்னார்கள். அங்கே நடுவர் இல்லாமல் எத்தனை மாதமாக இருந்தது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா? இப்படி அடிக்கடி நடுவர் இல்லாமல் நீதிமன்றங்கள் இருந்தால், அதனால் பாதிக்கப்படுகின்றவர்கள் நடுத்தர மக்களும், ஏழை எளிய மக்களும்தான். ஆகையால் இப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் இருக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, அங்கே தற்காலிகமாக இருந்த நடுவர் விடுப்பில் சென்ற காரணத்தால் 'வேக்கன்சி' ஏற்பட்டது. அந்த இடத்தைப் பூர்த்தி செய்வதற்காக 28-4-81-ல் ஒரு நடுவர் நியமிக்கப்பட்டார். அதனால் தேக்கம் அதிகம் ஏற்படவில்லை. தேவைக்குமேல் நடுவர்கள் இல்லாத காரணத்தால் ஒருவர் விடுப்பில் சென்றால், அவர் விடுப்பிலிருந்து வரும்வரையில் அந்த இடம் காலியாக இருக்கிறது. அதைக்கூட நிவர்த்தி செய்ய தற்போது உயர்நீதி மன்றத்துடன் ஆலோசனை செய்து வருகிறோம், நீதிபதிகள் எங்காவது விடுப்பில் செல்லும் போது அந்த இடங்களைப் பூர்த்தி செய்ய, ரிசர்வேஷன் செக்கன்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்களை வைத்துக் கொண்டால் நல்லது என்று அரசு கருதுகிறது. அதுபற்றி உயர்நீதி மன்றத்துடன் அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. பின்னர் அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

சிதம்பரத்தில் சாக்கடை அமைக்கும் திட்டம்.

* வினா எண் 110 திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னாற்காடு ஜில்லா சிதம்பரம் நகரத்தில் சாக்கடை திட்டம் சரியாக பணியாற்றவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) சிதம்பரம் சாக்கடைத் திட்டம், அங்குள்ள பொதுமக்கள் வீட்டு இணைப்புகள் பெற முன்வராததால், நல்ல முறையில் இயங்கவில்லை. தற்போது சிதம்பரம் நகராட்சி வீட்டு இணைப்புகள் கொடுத்து, இத்திட்டம் நல்ல முறையில் இயங்க தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த திட்டத்திற்கு மூலதனமாக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு மக்கள் முன்வரவில்லை என்று சொன்னார்கள். மக்கள் இந்தத்